[திரு. என். கணபதி] [1974 ஏப்ரல் 17

அடுத்தபடியாக, ஜனநாயக மரபுகள், பாரம்பரியம் என்பதை எல்லாம் நான் நூல்களில் மிக அதிகமாகப் பயின்று இருக்கிறேன். நேரடியாகவும் பயிற்சி பெற்று வந்திருக்கிறேன். அந்தப் பாரம் பர்யத்தைக் கடைப்பிடிக்கவும், ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதிலும் துணையாக நான் துணைத் தலைவர் என்ற முறையில் நிற்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த நான், இந்தப் பெரும் பொறுப்பை ஏற்று, அனைத்துக் கட்சித் தலைவர்களும் எனக்கு வழங்கிய பாராட்டுரைக்கு உகந்த முறையில் நடந்துகொள் வதற்கு, நடப்பதற்கு வழிகாட்டியாக இருந்த டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய மரியாதையையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும், வணக்கத் தையும் கூறி, உங்கள் அனைவருக்கும் உறுதுணையாக நிற்பேன், ஓர்ந்து கண்ணோடாது, ஒரு பக்கம் சாயாது, இந்த அவையை நடுநிலைமையில் நின்று நடத்துவேன் என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(7) அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் 'கல்வித் துறை' குறித்த அறிக்கை.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, I rise to present the Report of the Committee on Estimates on Education Department (Primary and Secondary).